JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW- 8 Witness
for Prosecution

CC No. 69/2021 Crime No. 310/2015 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | Pw-8-பானு | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 29th day of October 2025 | | | |

**எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கோயம்புத்தூர் HDFC வங்கியில் தனியார் வங்கி குழுமத்தில் துணைத் தலைவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கோவை மாவட்டம் சிட்டி வங்கியில் பணியில் இருந்தபோது தேதி, மாதம், நினைவில்லை பல வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மேற்படி சிட்டி வங்கியில் கணக்கு வைத்துள்ள ஜெயக்குமார் என்பவரின் வங்கி வரவு செலவு பட்டியலை ஆப்பக்கூடல் போலீசார் வழக்கு தொடர்பாக மேற்படி வங்கியிடம் கேட்டார்கள். அதன்படி கடந்த 01.01.2016 ம் தேதியன்று 01.09.2015 முதல் 30.09. 2015 வரையிலான ஜெயக்குமார் என்பவரின் வங்கி கணக்கில் நடைபெற்ற வரவு செலவு தொடர்பான வரவு செலவு பட்டியலை எங்களது வங்கி கடிதத்துடன் இணைத்து வழங்கினோம். நாங்கள் வழங்கிய வங்கி வரவு செலவு பட்டியலின்படி 07.09. 2015 ஆம் தேதியன்று ஜெயக்குமாரின் வங்கிக் கணக்கில் இருந்து KIANFIN SERVICE என்ற வங்கி கணக்கிற்கு ரூ.25,00,000/- அனுப்பப்பட்டுள்ளது. **வங்கி கடிதத்துடன் கூடிய வரவு செலவு பட்டியல் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் போலீசாரின் வேண்டுகோளின் படி 07.04.2016 ம் தேதியன்று DEBIT CARD 5536834200009706 என்ற எண் கொண்ட Debit Card மேற்படி ஜெயக்குமாரின் வங்கி கணக்கிற்கு தான் வழங்கப்பட்டுள்ளது என்று விபரம் தெரிவித்து ஒரு கடிதம் வழங்கினோம். **அந்த கடிதம் அ.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.10.29 06:11:46 +0530

**1, 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 07.09.2015 ஆம் தேதியன்று ஜெயக்குமாரின் வங்கி கணக்கிற்கு வேறொரு வங்கி கணக்கிலிருந்து ரூ.2,00,000/- மற்றும் ரூ.3,00,000/- வந்துள்ளது என்றால், சரிதான். அதே தேதியில் ஜெயக்குமார் வங்கி கணக்கிற்கு சந்திரமோகன் என்பவர் வங்கி கணக்கிலிருந்து ரூ.20,00,000/- வந்தது என்றால், சரிதான். அன்றைய தினம் வந்த ரூ.25,00,000/- பணத்தை ஜெயக்குமார் KIANFIN SERVICE என்ற நிறுவனத்திற்கு அனுப்பி உள்ளார் என்றால், சரிதான்.

KIANFIN SERVICE அனுப்பிய பணத்திற்கு சலான் எதுவும் நேரடியாக எழுதி கொடுக்கவில்லை என்றால், சரிதான். மேற்படி ரூ.25,00,000/- பணத்தை KIANFIN SERVICE ஜெயக்குமார் அவரது இணையதள வங்கியில் இருந்து மாற்றி உள்ளார் என்றால், சரிதான். அவர் நேரடியாக வங்கிக்கு வரவில்லை என்றால், சரிதான். போலீசார் எங்களிடம் கேட்ட வேண்டுகோள் கடிதத்தில் நான் ஜெயக்குமார் எனது வங்கிக்கு நேரடியாக வந்து சலான் மூலம் பரிவர்த்தனை செய்யவில்லை என்றும் அவரது எனது வங்கிக்கு நேரடியாக வரவில்லை என்று சொல்லி உள்ளேன் என்றால், சரிதான். அதனால் CCTV பதிவுகள் இல்லை என்று சொல்லியுள்ளோம் என்றால். சரிதான்.

இணையதள வங்கியில் பணம் அனுப்பும்போது பணம் பெறுபவரின் வங்கி கணக்கு சரியாக இருந்தால் தான் பணம் போகும் என்றால். சரிதான். நான் போலீசார் கொடுத்த வேண்டுகோள் கடிதத்திற்கு எப்போது பதில் கொடுத்தோம் என்றால். 01.01.2016 மற்றும் 07.04.2016 தேதிகளின் பதிலளித்தோம். என்னை 4 வருடங்கள் கழித்து தான் போலீசார் விசாரித்தார்கள் என்றால், தேதி ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால், எனக்கு தற்போது ஞாபகம் இல்லை.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.10.29 06:11:53 +0530

Sd/- (J.RAJKUMAR)

Judicial Magistrate No.1, Bhavani.